1973 நவம்பர் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே. டாக்டர் பால் அவர்களுடைய தலைமையின்கீழ் அரசுக் குழு இந்தப் பரிந்துரையைச் செய் திருக்கின்றது. விடுப்பு சம்பந்தமான விதிமுறைகளிலும், கணக்கீடு சம்பந்த மான விதிமுறைகளிலும், வித்தியாசம் ஏதுமில்லாமலிருந்தால், குழு பரிந்துரை செய்தவாறு ஆசிரியர்கள் எங்கு எந்த நிலையில் பணியாற்றிக்கொண்டிருந் தாலும், ஏற்றவாறு ஒரு பொது ஊழியப் பதிவேட்டினை வைத்துக்கொள்ள லாம் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரை செய்திருக்கின்றார், அரசினர் அதன்மீது சில குறிப்புகள் கேட்டிருக்கின்றார்கள். அந்தக் குறிப்புகள் வந்த பிறகு தக்க முடிவு எடுக்கப்படும்.

Participation of the Hon. Minister for Education in a Meeting

@ * 67. *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state whether it is a fact that action was taken against such of those teachers as were absent at the meeting held at Devakottai in which the Hon. the Minister for Education participated?

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட கூட்டம்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தேவகோட்டையில் கல்வி அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத் திற்கு ஆசிரியர்கள் வரவில்லை என்றதால், வராத ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, அப்படி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்து அதை அமைச்சர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டுவந்தால், அது நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பொது மக்களுடைய நன்கொடையை, பொருள்களாக, தொகைகளாக வந்தவைகளை பொதுமக்கள் பார்வைக்காகக் கொண்டுவருமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையர் சுற்றறிக்கையின் மூலம் ஆசிரியர்களைக் கோரியிருந்தார். சுற்றறிக்கையைப்

@ 23—11—1973 வினுப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

பார்த்த பின்னரும் அதன்படி நடக்கத் தவறிய ஆசிரியர்களை விளக்கம் கேட்டிருந்தார்கள். ஆசிரியர்கள் ஒரே விதமான விளக்கங்களை அனுப்பியிருக்கின்றார்கள். அது பரிசிலனையில் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் வரும்போது ஆசிரியர்கள் வராமல், ஒரே மாதிரியான பதிலைத் தந்திருப்பதை ஒரு திட்டமிட்ட செயலாக அரசு கருதுகிறதா? அதற்காகத் தனி நடவடிக்கை விரைவாக எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இரண்டு மூன்று குறிப்பிட்ட ஒன்றியங்களிலே அப்படியிருக்கின்றது. ஒரு சில ஆசிரியர்கள் வராமல் இருந்தார்கள். ஆக வருவதும் வராததும் அவர்களுடைய விருப்பம். இப்படிப்பட்ட மகாநாட்டிற்கு வருவதற்கு யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. ஆணையாளர் வேறுவிதமான கேள்வி கேட்டிருக்கின்றார். விளக்கம் கேட்டிருக்கின்றார். அதற்கு பதில் தந்திருக்கின்றார்கள் என்றும் சொல்கின்றார். அது ஒன்றிய ஆணையர் அளவில் பரிசிலனையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பரிசிலனையின் முடிவு எப்படி வருகிறது என்று பார்த்து அதற்குமேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அப்போது ஆசிரியர்கள் போராட்டம் ஒன்று நடந்துகொண்டிருந்த காரணத்தால், ஆசிரியர்கள் 'அரஸ்ட்' செய்யப்பட்டிருந்த காரணத்தால், தங்களுடைய உணர்ச்சியைக் காட்டுவதற்காகத்தான் இந்த மகாநாட்டில் ஆசிரியர்கள் கலந்துகொள்ளாமலிருந்தார்கள். மற்றப்படி கல்வி அமைச்சர் அவர்கள் எந்த மகாநாடு கூட்டினாலும், ஆசிரியர்கள் இதுவரையில் கலந்துகொள்ளாத நிலை ஏற்படவில்லை. ஆதலால் அந்த நிகழ்ச்சியைக் கருத்தில்கொண்டு, ஆசிரியர்கள் தங்களுடைய உணர்ச்சியைக் காட்ட, இம் மகாநாட்டில் கலந்துகொள்ளாமல் இருந்ததைக் கருத்தில் வைத்து எடுத்த இந்த நடவடிக்கையை நீக்குவதற்கான முயற்சியிலே அமைச்சரவர்கள் ஈடுபடுவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மகாநாட்டிலே பல ஆசிரியர்கள் கலந்துகொண்டார்கள். ஒரு சில ஆசிரியர்கள் கலந்துகொள்ளவில்லை. அந்த மகாநாட்டிலே பொதுமக்களிடமிருந்து வசூலித்த பொருள்கள், பணம் இவைகள் இருந்தன; அவைகளை ஒப்படைக்கும்படி ஆணையாளர் கேட்டிருக்கின்றார்; அவர்கள் வராவிட்டாலும் அந்தப் பொருள்களை

யாவது ஒப்படைத்திருக்கலாம். ஏன் அப்பொருள்களை ஒப்படைக்கவில்லை என்பதுதான் கேள்வி. மகாநாட்டிற்கு ஏன் வரவில்லை என்பது கேள்வியல்ல. அதைப் பொறுத்த பிரச்சினையில் விளக்கம் கோரப்பட்டிருக்கின்றது. அது ஆராய்ச்சியில் இருந்து வருகின்றது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, பொருள்கள் மகாநாட்டில் காட்சிக்குக் கொண்டுவரப்படவில்லையே தவிர, பள்ளியிலேயே அவற்றை ஒழுங்காக வைத்திருக்கின்றார்கள் என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்போது கேட்கின்ற கேள்வி மகாநாட்டிற்கு ஏன் கொண்டுவரவில்லை என்பதுதான். அதற்கான பதில் என்ன?

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, என்ன கேட்க வருகிறேன் என்பது தெரியாமலேயே, முன்னாலேயே நீங்கள் 'அப்ஸ்ரக்ட்' பண்ணிவிடுகிறீர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நீங்கள் கேட்பதைத்தான் நானும் கேட்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அப்படிச் சொல்வதென்றால், நான் கேள்வி கேட்பதை நிறுத்திக்கொள்கின்றேன்.

Educational Institutions in the Alagappa College Campus

@* 68. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Educational Institutions in the Alagappa College Campus, Sekkalai, Karaikudi;

(*b*) whether the staff employed in all these institutions are granted House Rent Allowance; and

(*c*) if not, the reasons therefor?

@ 23—11—1973 வினப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.